1974 சனவரி 22]

அரசாங்கம் கிராமப் பகுதிகளில் உள்ள குழந்தைகளுக்கும் இந்த உணவைச் சாப்பிட விளம்பரம் செய்து கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, உறுப்பினர் சொன்னது போல், நகரப்புறத்தில்தான் குழந்தைகள் உணவுக்காக இந்த முறையை வைத்திருக்கிறார்கள். காரணம், நகரத்தில் உள்ள தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுக்கக்கூடிய நிலைமை இல்லை. கிராமத்தில் உள்ள தாய்மார்கள் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுக்கின்ற நிலைமையிருப்பதால், கிராமத்தில் இதுவரையில் இந்த உணவை விரும்பாமல் இருக்கிறார்கள். பற்றாக்குறை இருக்கிற நேரத்தில், அவர்களுக்கும் இந்த உணவை விளம்பரம் செய்வது ஆபத்து என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் குழந்தைகளாக ஆகிறார்கள். அவர்களுக்கும் 'பேபி' உணவு தேவைப்படுகிறது. ஆகவே வயதை நிர்ணயித்து, 60 வயதுக்கு மேற்பட்டவர்களை குழந்தைகளாகப் பாவித்து இந்த உணவு தருவார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, 60 வயதுக்கு மேற்பட்டு குழந்தைப் பருவம் வருகிறவர்களுக்கு, இந்த உணவு தான் சாப்பிட வேண்டும் என்ற நிலை இல்லை. சாதாரண உணவை, குழந்தைகளுக்குக் கரைத்துக் கொடுப்பது போல், இவர்களுக்கும் கரைத்துக் கொடுத்து விடலாம். மென்று சாப்பிட பல் இல்லை என்று யோசிக்கிறார் போலிருக்கிறது. அதற்கு நமது பரம்பரை முறை இருக்கிறது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவரவர்களே, கிராமங்களில் பால்வாடி என்ற அமைப்பு வைத்துக்கொண்டு குழந்தைகளுக்கு உணவு கொடுத்து வருகிறார்கள். அதற்கும் இதற்கும் சம்பந்தம் உண்டா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, அந்தத் திட்டம் வேறு, இது வேறு.

Collection Bonus Scheme

* 29 *Q.*—THIRU V. THANGAPANDIAN: (on behalf of THIRU R. SAMBASIVAM): Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Pallavan Transport Corporation has introduced a new scheme called collection bonus scheme in some routes in Madras City; and

(*b*) if so, whether there is any proposal to introduce the scheme in all other routes in Madras?

[1974 சனவரி 22

வசூல் போனஸ் திட்டம்.

திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. இரா. சாம்பசிவம் சார்பில்): மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வசூலில் போனஸ் கொடுக்கும் புதிய முறை ஒன்றை பல்லவன் போக்குவரத்துக் கழகத்தினர் சென்னையில் சில தடங்களில் அமலுக்குக் கொண்டு வந்துள்ளனரா?

(இ) ஆமெனில், இம்முறையை சென்னையிலுள்ள மற்ற தடங்களிலும் கொண்டுவரும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) பல்லவன் போக்குவரத்துக் கழகத்தினர் வசூல் போனஸ் திட்டத்தைச் (Collection Bonus Scheme) சோதனை அடிப்படையில் 1973 ஆம் ஆண்டு ஏப்ரலில் இரண்டு பணிமனைகளிலும் பின்னர் இதைத் தொடர்ந்து 1—6—1973 முதல் எல்லாப் பணிமனைகளிலும் செயல்படுத்தினர். பல்லவன் போக்குவரத்துக் கழகம் செயல்படும் இம்மாநகரப் பேருந்து வழித்தடங்கள், செங்கற்பட்டு மாவட்டப் பேருந்து வழித்தடங்கள் அனைத்திற்கும் இத்திட்டம் பொருந்தும்.

திரு. ஒய் வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: இந்த கலெக்ஷன் பாட்டா சிஸ்டம் வந்த பிறகு, பல்வேறு மாவட்டங்களில் கண்டக்டர்கள் நிறைய வசூல் ஆக வேண்டும் என்பதற்காக ஏராளமான பயணிகளை ஏற்றி நெரிசலை உண்டாக்குகிறார்கள். அதனால் பலவிதமான ஆபத்துக்கள் ஏற்படுவதால், இந்த கலெக்ஷன் பாட்டா சிஸ்டம் அவசியமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, ஏற்றவில்லையே என்ற குறையை நீக்க இந்த முறை அவசியம்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: தலைவரவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் ஊக்குவிப்பு போனஸ் மூலமாக நல்ல வசூல் கிடைக்கிறது என்று அமைச்சருடைய பதிலிலிருந்து தெரிகிறது. இதே முறையை எல்லாப் போக்குவரத்துக் கழகங்களும் பின்பற்ற ஏதாவது நடவடிக்கை இருக்கிறதா? அப்படி இல்லாவிட்டால், அதற்காக நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில், இந்தத் திட்டம் அமுலில் இருக்கிறது. இதே போன்று சேரன் போக்குவரத்துக் கழகத்தில் அவர்கள் வேறொரு

1974 சனவரி 22]

திட்டத்தை அமுல்படுத்தி அதுவும் நல்லமுறையில் இயங்கிக்கொண்டிருக் கிறது. எந்தத் திட்டத்தை எந்த வகையிலே நிறைவேற்ற வேண்டும் என்பதை ஆங்காங்கு இருக்கின்ற போக்குவரத்துக் கழகங்கள், அந்தத் தொழிலாளர் களுடைய ஆதரவுக்கும், ஒத்துழைப்பிற்கும் ஏற்ப உருவாக்க வேண்டிய அவசிய மிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, about this Collection Bonus Scheme, may I know whether any norm is fixed for each bus and only those who collect above this norm are paid bonus; or in what way it operates? We would like to have details.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாநகர் வழித் தடங்களில் எவ்வளவு வசூலாகிறதோ, அதில் 5 சதவிகிதத்தை கண்டக்டர் களும், டிரைவர்களும் சமமாகப் பிரித்துக்கொள்கிறார்கள். மாவட்ட வழித் தடங்களில், அவர்கள் எவ்வளவு வசூல் செய்கிறார்களோ, அதில் 3 சதவிகி தத்தை டிரைவர்களும், கண்டக்டர்களும் பிரித்துக் கொள்கிறார்கள். ஒரு டெப்போவில் எவ்வளவு ரூபாய் கண்டக்டருக்கும், டிரைவருக்கும் இந்தத் திட்டத்தின் மூலம் கூடுதலாகக் கிடைக்கிறதோ, அதே அளவு ரூபாய் தொழில் நுட்பப் பிரிவினருக்கும் தரப்பட்டு, அன்றையதினம் பணியாற்றுகிற அத்தனை பேரும் சமமாகப் பங்கிட்டுக்கொள்கிறார்கள். பொதுவாகப் பயணிகளை ஏற்றுவதன் மூலம்தான் வசூல் அதிகரிக்கும் என்ற அடிப்படையில் டிரை வருக்கும் கண்டக்டருக்கும் தரப்படுகிறது. பஸ்ஸைக் கொடுத்தால்தான், அவர்கள் அதை எடுத்துச் செல்ல முடியும் என்ற வகையிலே, பஸ்ஸைப் பரா மரிக்கின்ற தொழில் நுட்பப் பிரிவினருக்கும் இந்தத் திட்டம் வகை செய் கிறது. இதன் மூலம் இதுவரையில் நாள் ஒன்றுக்கு 2.8 லட்சம் ரூபாய் என்றிருந்த வசூல் 3½ லட்ச ரூபாய் அளவுக்கு ஒரு நாளைக்கு ஆகியிருக் கிறது. எனக்கு சமீபத்தில் கிடைத்த தகவல்படி 3.9 லட்சம் வரையில் வசூல் வந்திருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : Does that imply, Sir, that every day 15,000 to 20,000 rupees is being paid to the employees of the Pallavan Transport Corporation by way of bonus?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மொத்தம் எவ் வளவு போனஸ் தருகிறார்கள் என்ற விவரம் என்னிடம் இல்லை. ஆனால் ஒரு மாதத்திற்கு டிரைவருக்கோ, கண்டக்டருக்கோ 90 ரூபாயிலிருந்து 100 ரூபாய் வரை கிடைக்கிறது. தொழில் நுட்பப் பிரிவினரில் ஒருவருக்கு சராசரி 65 ரூபாயிலிருந்து 75 ரூபாய் வரை மாதத்திற்கு கூடுதலாகக் கிடைக்கிறது.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, சென்னை, நகரில் மொத்த வசூலில் எத்தனை சதவிகிதம் அவர்களுக்கு போனஸாகப் பிரித்துக் கொடுக்கப்படு கிறது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 5 சதவிகிதம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி(*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

2. ஒழுங்குப் பிரச்சினை.

வினா நேரம் குறித்து.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்ப விரும்புகிறேன். நமது மேலவை நடைமுறை சட்டதிட்டங்களில், ஒரு மணி நேரமாவது குறைந்தது கேள்விகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்றிருக்கிறது. கேள்விகளை சட்டமன்ற கூட்டங்களில் உறுப்பினர்களாகிய நாங்கள் போடுவதன் மூலம் பிரச்சினைகளுக்கு அரசின் கவனத்தைப் பெறவும், அவற்றிற்கு அமைச்சர்களிடமிருந்து பதிலைப் பெறவும் வாய்ப்பாக இருக்கிறது. இன்றைக்கு நான்கு கேள்விகள் மட்டுமே இங்கே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக் கின்றன. இதற்கான காரணம் என்ன? கேள்விகள் நான்கு மட்டுமே வைத்து விட்டு, 20 நிமிடங்களில் கேள்வி நேரம் முடிந்திருக்கிறது. ஒரு மணி நேரம் இருக்க வேண்டியதை ஏன் 20 நிமிடங்களில் முடிக்க வேண்டிய அவசியம் வந்தது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 266 கேள்விகளுக்கு பதில் வரவில்லை. எந்தெந்த அமைச்சர்களிடம் எத்தனை, எத்தனை கேள்விகளுக்கு பதில் வராம லிருக்கிறது என்பதைக் குறித்து அவர்களுக்கு அனுப்பி, அவர்களால் சம்பந் தப்பட்ட இலாகாக்களுக்கு சொல்லி அனுப்பப்பட்டிருக்கிறது. இப்பொழுது பதில்கள் தயாராக உள்ள கேள்விகள் 26 தான் இருக்கின்றன. சில அமைச்சர் கள் அவசரமாகப் போக வேண்டியிருந்ததால், தங்களுக்கு கேள்விகள் இன்றைய தினம் வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கேள்வி களை எல்லாம் சேர்த்து நாளை, மறு நாள் போட்டால் இன்னும் அதிகமாக வரும். சாதாரணமாக கேள்விகள் டிசம்பர் மாதத்தோடு முடியும். அதே கேள்விக்கு வேறு ஒரு நம்பர் கொடுத்து, அடுத்த வருஷம் கொண்டு வரப்படு கிறது. ஆகையினால் உறுப்பினர்கள் டிசம்பர் மாதம் ஆகிவிட்டதே. பதில்கள்